செய்தி வெளியீடு எண் : 291 நாள் : 06.02.2025

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்

## திருநெல்வேலி இருட்டுக்கடை அல்வா கடையை திடீரென பார்வையிட்டார். அல்வா கடையினருக்கும் பொது மக்களுக்கும் இன்ப அதிர்ச்சி !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் 6.2.2025 மற்றும் 7.2.2025 ஆகிய நாட்களில் கள ஆய்வு மேற்கொண்டு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இன்று (6.2.2025) மாலை, திருநெல்வேலியில் பல ஆண்டுகளாக புகழுடன் விளங்கும் இருட்டுக்கடை அல்வா கடைக்கு திடீரெனச் சென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடை ஊழியர்களைக் கண்டு அல்வா தயாரிப்பு முறை, விற்பனை குறித்து விசாரித்து அறிந்து கொண்டார்கள்.

சற்றும் எதிர்பாராமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருட்டுக்கடை அல்வா கடைக்கு வந்து தங்களுடன் பேசியது இன்ப அதிர்ச்சியாக இருந்தது என்று அல்வாக் கடையினர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். அத்துடன் அந்தக் கடையில் கூடியிருந்த பொதுமக்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கண்டதும் ஆச்சரியம் கொண்டனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு எளிமையாக எல்லோருடனும் நெருங்கி வந்து பழகுவது பெருத்த சந்தோசத்தை எங்களுக்கு ஏற்படுத்தியது என்றும் கூறி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பாராட்டினார்கள்.

---------------------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu